**செய்தி வெளியீடு எண்: 413** **நாள் : 18.08.2015**

<u>**செய்தி வெளியீடு**</u>

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் தலைமையில் கூட்டுறவுத்துறை திட்ட செயலாக்கங்கள் குறித்து ஆய்வு.**

- 58 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் வாயிலாக குறைந்த விலையில் 9,824.162 மெ.டன்கள் காய்கறிகள் ரூ.28.19 கோடிக்கு விற்பனை.
- 100 அம்மா மருந்தகங்கள் மற்றும் 195 கூட்டுறவு மருந்தகங்கள் வாயிலாக 15% வரையிலான தள்ளுபடியில் ரூ. 239.90 கோடிக்கு தரமான மருந்துகள் விற்பனை

********

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் **திரு.செல்லூர் கே.ராஜு** அவர்கள் தலைமையில், இன்று தலைமைச் செயலகத்தில், 2015–16 ஆம் ஆண்டில் கூட்டுறவுத்துறையின் திட்ட செயலாக்கங்கள் குறித்து கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் நடப்பாண்டில் கூட்டுறவுத்துறையின் சார்பில் வழங்கப்பட்ட பயிர்க்கடன் உள்ளிட்ட பல்வேறு வகையான கடன் உதவிகள், பொதுவிநியோகத்திட்ட செயல்பாடுகள், வங்கிகளின் வைப்புத்தொகை சேகரித்தல், நவீனமயமாக்கல் பணிகள், பாதுகாப்பு பெட்டகவசதிகள், பொதுசேவை மையங்களின் செயல்பாடுகள், அம்மா மருந்தகங்கள், பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளின் செயல்பாடுகளின் மேம்பாடு ஆகியவை குறித்து உயர் அலுவலர்களுடன் ஆய்வு மற்றும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால், வேளாண் உற்பத்தியை பெருக்கிடும் வகையில் நடப்பு ஆண்டில் விவசாயிகளுக்கு ரூ.5500 கோடி பயிர்க்கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 2,63,044 விவசாயிகளுக்கு ரூ.1,515.61 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் மக்கள் சேவைத் திட்டமான 58 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் வாயிலாக குறைந்த விலையில் 31.7.2015 வரை 9824.162 மெ.டன்கள் காய்கறிகள் ரூ.28.19 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அனைத்து தரப்பு மக்களும் தரமான மருந்துகளை 15 சதவீதம் வரை தள்ளுபடி விலையில் வழங்கிடும் வகையிலான 100 அம்மா மருந்தகங்கள் மற்றும் 195 கூட்டுறவு மருந்தகங்கள் சிறப்பாக சேவையாற்றி வருகின்றன. இம்மருந்தகங்கள் வாயிலாக 31.7.2015 வரை ரூ. 239.90 கோடிக்கு தரமான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**மாண்புமிகு அம்மா** அவர்களின் எண்ணத்தை ஈடேற்றும் வகையில், பொதுச்சேவை மையங்கள், அம்மா மருந்தகங்கள், பண்ணைபசுமை நுகர்வோர் கடைகள் உள்ளிட்ட அனைத்து சேவை திட்டங்களும், மக்களுக்கு முழுமையாக சென்றடையும் வகையில் அலுவலர்கள் திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மை செயலாளர் திரு.சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திருமதி.ஜெயஸ்ரீ முரளீதரன், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர்கள் திரு.த.ஆனந்த்,இ.ஆ.ப., திரு.கே.ராஜேந்திரன், திரு.இரா.கார்த்திகேயன், திரு.மு.செந்தமிழ்ச்செல்வன், திரு.எம்.ராஜசேகர், டாக்டர் நா.வில்வசேகரன், திரு.பா.பாலமுருகன், திருமதி க.பிரமிளா, திரு.ஜெகன்நாதன், திருமதி ஆர்.பிருந்தா, திரு.ம.அந்தோனிசாமி ஜான் பீட்டர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் செயலாளர் திரு. சியாம்சுந்தர் மற்றும் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**